


குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (25.7.2024) 348 இளைஞர் மன்றங்களுக்கு ரூ34,80,000 மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். உடன் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் தலைமை பொறியாளர் வே.சண்முகசுந்தரம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் நெடுஞ்சாலை துறை சார்பில் ரூ.51.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட திருத்தணி நகருக்கான புறவழிச்சாலையினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி திறந்து வைத்து திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, முன்னிலையில் பார்வையிட்டார் உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரபு சங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி, நெடுஞ்சாலைத்துறை உதவி இயக்குநர் ரகுமான் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் ஞான அருள்ராஜ் , ஒன்றிய நகர பேரூர்ச் செயலாளர்கள் ஆர்த்தி ரவி, வி.வினோத் குமார், சி.என்.சண்முகம், பெ.பழனி, சி.ஜெ.சீனிவாசன், பிடி.சந்திரன், ஜோதிக்குமார், டி.ஆர்.கே.பாபு ஒப்பந்ததாரர் மாதையன் உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கவுன்சிலர்கள் நெடுஞ்சாலைத்துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டன.

### பாசிச பாஜக ஒன்றிய அரசை கண்டித்து மதுரை வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாடிப்பட்டியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி - சேடப்பட்டி மு.மணிமாறன் அறிக்கை!

*மதுரை, ஜூலை 26:*

தலைமை கழக அறிவிப்புக்கு இணங்க தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் பாஜக ஒன்றிய அரசை கண்டித்து நாளை 27ஆம் தேதி மதுரை வடக்கு மற்றும் மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் வாடிப்பட்டியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும், இதில் கழகத்தினர் பெரும் திரளாக அலைகடலென திரண்டு வந்து பங்கேற்குமாறும் மாவட்ட செயலாளர்கள் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, சேடப்பட்டி மு. மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். அதன் விபரம்,





தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசு நிதிநிலை அறிக்கையிலும் தமது வஞ்சத்தை காட்டி உள்ளது. ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை சமச்சீராக இந்தியா முழுவதிலும் உள்ள அனைத்து மாநிலங்கள் பயன் பெறும் வகையில் அமைய வேண்டும், பாசிச பாஜக ஒன்றிய அரசு தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை அள்ளிக் கொடுத்துள்ளது

நாட்டின் வளர்ச்சிக்கு மாபெரும் பங்கு வகிக்கும் தமிழ்நாடு போன்ற சில மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கி வருகிறது. மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு கோரி பலமுறை கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோரிக்கை வைத்தும் எந்த பயனும் இல்லை.

இப்படி தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வருவது பாசிச பாஜக ஒன்றிய அரசின் மக்கள் விரோத போக்காகும். ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையின் வஞ்சத்தை கண்டிக்கும் வகையில் தலைமை கழகத்தின் அறிவிப்புக்கு இணங்க நாளை 27.07.2024 சனிக்கிழமை காலை 10 மணி அளவில் மதுரை வடக்கு, மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் வாடிப்பட்டியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊராட்சி செயலாளர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளாக அனைவரும் அலைகடலென திரண்டு வருமாறு மாவட்ட செயலாளர்கள் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, சேடப்பட்டி மு. மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !




### விருப்பு வெறுப்பு அரசியல் நடத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசு

# இனியாவது நியாயம் - நீதி உணர்வோடு செயல்படுமா?

### ‘தினகரன்’ தலையங்கத்தில் கேள்வி!

*சென்னை,ஜூலை.26-*

தனி மனித மனநிலை, விருப்பத்தை மனதில் வைத்துக் கொண்டு விருப்பு வெறுப்பு அரசியல் நடத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசு இனியாவது நிதி ஒதுக்கீட்டில் நியாயம் நீதி உணர்வோடு செயல்படுமா என தினகரன் நாளேடு 25.7.2024 தலையங்கத்தில் கேள்வி எழுப்பியுள்ளது.

அத் தலையங்கம் வருமாறு:

ஒன்றிய அரசின் 2024-25 ஆம் நிதியாண்டிற்கான பட்ஜெட்டில் தமிழகம் முழுமையாக புறக்கணிக்கப்பட்டதற்கு எதிர்க்கட்சிகள், எம்பிக்கள் மற்றும் பொதுமக்கள் கடும் கண்டனங்களை பதிவு செய்துள்ளனர். இது ஒட்டு மொத்த இந்தியாவுக்கான பட்ஜெட் அல்ல; பா.ஜ.க. ஆட்சி செய்யும் மற்றும் ஆதரவு அளிக்கும் மாநிலங்களுக்கான பட்ஜெட் என்ற கருத்து பொதுவில் வைக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் இந்த பாரபட்ச நடவடிக்கையை கண்டித்து, இந்தியா கூட்டணி கட்சி எம்பிக்கள் நாடாளுமன்றத்தில் நேற்று வெளிநடப்பு செய்துள்ளனர். மேலும், ஒன்றிய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

இதில் கொடுமையான விஷயம் என்னவென்றால், பாஜ அரசு ஏற்கனவே அறிவித்த திட்டங்களுக்கு கூட நிதி ஒதுக்கப்படவில்லை. 2021-22ம் நிதியாண்டிற்கான ஒன்றிய அரசின் பட்ஜெட்டில், சுமார் 118.9 கிலோமீட்டர் நீளம் கொண்ட சென்னை 2ஆம் கட்ட மெட்ரோ ரயில் பணிகளுக்காக நிதி ஒதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அன்று அறிவித்ததும் இதே நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தான். ஆட்சி செய்ததும் பாஜ தான். ஆனால், நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில், இது தொடர்பாக மூச்சு கூட விடவில்லை. இந்த திட்டம் நடைமுறைக்கு வந்தால் சென்னை மேலும் வளர்ச்சியடையும். சுமார் 170 கிமீ தூரம் வரை மெட்ரோ ரயில் விரிவடையும்.


தினகரன்
ஜூலை 25, 2024 வியாழக்கிழமை
நீதியில்லா நிதி
ஒன்றிய அரசின் 2024-25ம் நிதியாண்டிற்கான பட்ஜெட்டில் தமிழகம் முழுமையாக புறக்கணிக்கப்பட்டதற்கு எதிர்க்கட்சிகள், எம்பிக்கள் மற்றும் பொதுமக்கள் கடும் கண்டனங்களை பதிவு செய்துள்ளனர். இது ஒட்டுமொத்த இந்தியாவுக்கான பட்ஜெட் அல்ல; பாஜ ஆட்சி செய்யும் மற்றும் ஆதரவு அளிக்கும் மாநிலங்களுக்கான பட்ஜெட் என்ற கருத்து பொதுவில் வைக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் இந்த பாரபட்ச நடவடிக்கையை கண்டித்து, இந்தியா கூட்டணி கட்சி எம்பிக்கள் நாடாளுமன்றத்தில் நேற்று வெளிநடப்பு செய்துள்ளனர். மேலும், ஒன்றிய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.
இதில் கொடுமையான விஷயம் என்னவென்றால், பாஜ அரசு ஏற்கனவே அறிவித்த திட்டங்களுக்கு கூட நிதி ஒதுக்கப்படவில்லை. 2021-22ம் நிதியாண்டிற்கான ஒன்றிய அரசின் பட்ஜெட்டில், சுமார் 118.9 கிலோமீட்டர் நீளம் கொண்ட சென்னை 2ம் கட்ட மெட்ரோ ரயில் பணிகளுக்காக

சென்னையோடு சேர்த்து பெங்களூரு மெட்ரோ ரயில் திட்டம், கொச்சி மெட்ரோ ரயில் திட்டம், நாக்பூர் மெட்ரோ ரயில் திட்டங்களும் அறிவிக்கப்பட்டன. இந்த திட்டங்களுக்காக ரூ.18,978 கோடி நிதியையும் விடுவிக்கப்பட்டுள்ளது. ஆனால், சென்னை 2ஆம் கட்ட மெட்ரோ ரயில் பணிகளுக்கு, ஒன்றிய அரசு தரப்பில் இதுவரை ஒரு ரூபாய் கூட ஒதுக்கப்படவில்லை. ரூ.63,246 கோடி மதிப்பிலான இந்த திட்டம், ஒன்றிய அரசின் பங்களிப்பின்றி முழுமையடையாது. இப்படிப்பட்ட சூழலில், இது வரை இந்த திட்டத்தை கண்டும் காணாமல் இருப்பது ஒன்றிய ஆட்சிக்கு அழகல்ல.

இதேபோல் தமிழகத்தின் பெரிய மாநகரங்களான மதுரை, கோவையில் மெட்ரோ ரயில் சேவை திட்டமானது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு முதல் கட்ட பணிகள் துவங்கியுள்ளன. குறிப்பாக, மதுரையில் திருமங்கலம் முதல் ஒத்தக்கடை வரை சுமார் 31 கிமீ தொலைவுக்கு மெட்ரோ ரயில் வழித்தடம் அமைய உள்ளது. தென்மாவட்டங்களின் தலைநகராக கருதப்படும், மதுரையில் ரூ.11,360 கோடி மதிப்பிலான இந்த திட்டம் அமைந்தால், போக்குவரத்து நெரிசல் தீர்க்கப்படும். ஆய்வுப்பணிகள் விறுவிறுப்பாக நடந்து வந்த நிலையில், மதுரை, கோவைக்கான மெட்ரோ ரயில் திட்டமும் ‘வழக்கம் போல’ இழுத்தடிக்கப்படுமோ என்ற நிலை காணப்படுகிறது.

மேலும், மதுரை விமான நிலையத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் திட்டமும் பல ஆண்டுகளாக கிடப்பில் உள்ளது. 2015ஆம் ஆண்டு பட்ஜெட்டில் தமிழகத்திற்கு எய்ம்ஸ் திட்டம் அறிவிக்கப்பட்டது. பல இழுத்தடிப்புக்கு பின் கடந்த 2019 எம்பி தேர்தலுக்கு முன் ஜனவரியில் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். இது வரை சுற்றுச்சுவர் மட்டுமே எழுப்பப்பட்டு பரிதாபமாக காட்சியளிக்கிறது. உள்கட்டுமானப்பணிகள் மந்தமான முறையில் நடந்து வருகின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு குடிமகனின் வாக்கானது, தங்களது தேவைகளை பூர்த்தி செய்யும் கட்சிக்கு, அவரது சுய விருப்பத்தின் அடிப்படையில் செலுத்தப்படும். அது தனிமனித மன நிலை, விருப்பத்தை பொறுத்தது. இதை மனதில் வைத்துக் கொண்டு விருப்பு, வெறுப்பு அரசியல் நடத்துவது பா.ஜ.க. அரசுக்கு கைவந்த கலையாகவே உள்ளது. இனியாவது, நிதி ஒதுக்கீட்டில் நியாயம், நீதி உணர்வோடு செயல்படுமா ஒன்றிய பா.ஜ.க. அரசு?

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# சேலம் கோட்டை மைதானத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆர்.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. - டி.எம்.செல்வகணபதி எம்.பி. - எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!







*சேலம், ஜூலை 26-*

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் ஆர்.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி., சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அனைத்து மாநிலத்தையும் உள்ளடக்கி ஒருங்கிணைந்ததாக இருக்க வேண்டும், ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கை பிரகடனமாகவே இருக்க வேண்டும்.

ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதி நிலை அறிக்கையாக தெரியவில்லை. மாறாக, பிரதமர் மோடி தனது ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கிறது. ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசை கண்டித்து சேலம் கோட்டை மைதானத்தில் நாளை (27.07.2024-ஆம் தேதி சனிக்கிழமை) காலை 09.30 மணி அளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் சேலம் மத்திய, கிழக்கு, மேற்கு மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, நகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழகச் செயலாளர்கள், பகுதி கழகச் செயலாளர்கள், நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாநகர கோட்டக் கழக செயலாளர்கள், ஊராட்சிகளில் உள்ள கிளைக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் வருகை தந்து கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம் பெருமாள் பட்டு ஊராட்சி ரயில் நகர பகுதியில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு கிலோ மீட்டர் வரை சாலை மற்றும் அரை கிலோ மீட்டர் வரை கால்வாய் அமைக்கும் பணிகளை பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன், பொதுகுழு உறுப்பினர் த.எத்திராஜ், ஒன்றிய நிர்வாகிகள் எஸ். பரமேஸ்வரன் , டி.தரணி, எம்.சக்திவேல், கஜேந்திரன், கௌரிகஜெந்திரன், எஸ்.நடராஜன், ராஜா(ஏ) ஏழுமலை, கோபி கிருஷ்ணன், முகுந்தன், ராஜராம்,ராமசந்திரன், துரைராஜ், பௌரோஸ், துரைராஜ், அகஸ்டீன், விக்னேஸ்வரன், ரமேஷ் கண்ணன் உள்பட பலர் உள்ளனர்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் - சாலவாக்கம் ஒன்றிய துணைச் செயலாளர்

# த.தமிழ்வேந்தன் படத்திறப்பு; க.சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

### ஒன்றியச் செயலாளர்கள் டி.குமார் - கெ.ஞானசேகரன் பங்கேற்பு!

*காஞ்சிபுரம், ஜூலை. 26-*

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றியக் கழக துணைச் செயலாளர் த.தமிழ்வேந்தன் 13.7.2024 அன்று இயற்கை யெய்தினார். அன்னாரது திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. த.தமிழ் வேந்தன் படத்தினை திறந்து வைத்து மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தினார்.

மேலும் சாலவாக்கம் ஒன்றியச் செயலாளர் தி.குமார், உத்திரமேரூர் ஒன்றியச் செயலாளர் கெ. ஞானசேகரன், உத்திரமேரூர் பேரூர் செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் எஸ்.ஆர். வெங்கடேசன், ஒன்றிய பொருளாளர் பி.வெ.பாலமுருகன், ஒன்றிய குழு உறுப்பினர் நதியா கோபி, க.வெங்கட்ராமன், த.கோகுல கண்ணன் து. மணிகண்டன் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினரும் மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தினர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைக்கிணங்க, வருகின்ற சனிக்கிழமை (27.07.24) தாம்பரத்தில், தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காத ஒன்றிய அரசை கண்டித்து நடைபெறுகிற ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு ஆலந்தூர் வடக்குப் பகுதி திமுக அவசர செயற்குழு கூட்டம் நேற்று ஆலந்தூரில், பகுதி அவை தலைவர் வே.டில்லிபாபு தலைமையில், பகுதி கழக நிர்வாகிகளான கோ கோடீஸ்வரன் சையத் அபுதாஹிர், ஆகியோர் முன்னிலையில், ஆலந்தூர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் எம்.சி. ஆலோசனை வழங்கினார், இக்கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.டி.பூபாலன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கலாநிதிகுணாளன், வட்டக் கழக செயலாளர்கள் ஜே.செல்வேந்திரன் எம்.சி. டி.ரவி, மா.கோ.கருணாநிதி, ப.கிருஷ்ணமூர்த்தி, கே.பி.முரளிகிருஷ்ணன், எம்.ஆர்.சீனிவாசன் மாவட்ட பிரதிநிதிகள் கே.பாபுகுமார், இரா. கீர்த்திராஜ், மாமன்ற உறுப்பினர் திருமதி செ.அமுதபிரியாமற்றும் வட்ட கழக நிர்வாகிகள் பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.